# Visit of External Affairs Minister to Tashkent for SCO Council of Foreign Ministers’ Meeting (July 28-29, 2022)

---

## ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளியுறவுத் துறை அமைச்சர் தாஷ்கண்ட் பயணம் (ஜூலை 28-29, 2022)

ஜூலை 29, 2022

உஸ்பெகிஸ்தான் குடியரசின் தற்காலிக வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. விளாடிமிர் நொரோவோ அவர்களின் அழைப்பின் பேரில் ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக 2022 ஜூலை 28-29 தேதிகளில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உஸ்பெக்கிஸ்தான் சென்றார்

2. இந்தியா தவிர, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15 மர்றும் 16 ஆம் தேதிகளில் சமர்க்கண்டில் நடைபெறவுள்ள உறுப்பு நாடுகள் தலைவர்களின் மாநாட்டிற்கான முன்னேற்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. பிராந்திய மற்றும் உலக அளவிலான விஷயங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

3. இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழுக் கூட்டத்தை ஒட்டி, நமது வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சக அமைச்சர்களுடனும், ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் பொதுச் செயலாளருடனும் இருதரப்பு சந்திப்புகளை மேற்கொண்டார்.

**தாஷ்கண்ட்**
**ஜூலை 29, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.